மார்ச, 2017

# இலங்கையில் பேரூந்துகளிலும் புகையிரதங்களிலும் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தல்கள்

## பிரச்சனை

**2015 ஆம் ஆண்டு இலங்கை ஐக்கியநாடுகள் சனத்தொகை நிதியத்தினால (UNFPA) நடாத்தப்பட்ட ஆய்வு[1] ஒன்றின் முடிவுகளின் படி இலங்கையில் 90 ஆன பெண்கள் பொதுப்போக்குவரத்து பேரூந்துகளிலும் புகையிரதங்களிலும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.**

பொதுப்போக்குவரத்து ஊடகங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுதலானது உலகளாவிய ரீதியில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனையாக இருப்பதுடன் உடல் துஷ்பிரயோகம், வாய்மொழி மூலமான துஷ்பிரயோகம் ஆகியவற்றின் பல்வேறு படிநிலைகளில் இடம்பெற்று பாலியல் வல்லுறவுக்குக்கூட இட்டுச்செல்ல முடியும். இது பெண்களின் இயக்கத்தை கட்டுப்படுத்துவதோடு சமூகக்கட்டமைப்புக்களுக்குள்ளே நிலவும் பாலின சமத்துவமின்மையை பிரதிபலிக்கிறது.பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் அடிப்படை உரிமையையும் சுதந்திரத்தையும் மீறுவதற்கு மேலதிகமாக இது பெண்கள் பொதுவாழ்வில்,வேலைத்தளத்தில் மற்றும கல்வியில் முழுமையான பங்களிப்பை வழங்க முடியாத பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தவும் பங்களிக்கிறது.

பொதுப்போக்குவரத்து ஊடகங்களானது பெரும்பாலான இலங்கையர்களுக்கு பொருளாதார ரீதியில் சாத்தியப்படக்கூடிய மார்க்கமாக இருக்கின்றது அத்தோடு அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய பொருளாதார செயன்முறையாகவும் இருக்கிறது. இருந்தாலும் பொதுப்போக்குவரத்து சேவையை பெற்றுக்கொள்வதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. குறைந்த வருமானம் ஈட்டும் வகுப்பை சார்ந்த பெண்கள் ஆண்களை விட அதிகமாக பொதுப்போக்குவரத்தில் தங்கியிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.[2] குடும்பப்பாரத்தின் பெரும்பகுதியை சுமக்க வேண்டியிருக்கும் பெண்கள் பொருளாதார ரீதியில் சாத்தியமாக உள்ள போக்குவரத்து மார்க்கத்தில் அடிக்கடி பயணம் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. பெண்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதும் இந்த பால் சார்ந்த நுணுக்கங்களும் பொதுப்போக்குவரத்து ஊடகங்களின் பாவனையை பாதிக்கவே செய்கின்றன.

இலங்கை தனது முழுமையான பொருளாதார ஆற்றலை அடைய வேண்டுமெனில் தொழில் செய்யும் குடித்தொகையின் பங்களிப்பை உச்சமாக பயன்படுத்திக்கொள்ளல் முக்கியமானதாகும். வேலை செய்யும் குடித்தொகையில் குறைந்து வரும் பெண்களின் பங்களிப்பை கருத்தில் கொள்ளும்போது, பெண்களை பாதிக்கும் காரணிகளை புரிந்து கொள்வது முக்கியமானதாகும்.[3] எடுத்துக்காட்டப்பட்ட பல காரணிகளில் பொதுப்போக்குவரத்து ஊடகங்களில் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தலானது பொருளாதார வாய்ப்புக்களை நோக்கிய பெண்களின் பாதையில் முக்கியமான முட்டுக்கட்டையாக விளங்குகிறது.



**இலங்கையில் பொருளாதார செயல்திறனுள்ள வயதுப்பிரிவில் இலங்கைப்பெண்களில்**

**34%**

**மட்டுமே தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்**

*மூலம்: இலங்கை தொழிலாளர் தொகை ஆய்வு ஆண்டறிக்கை, புள்ளிவிபரவியல் மற்றும் தொகைமதிப்பு திணைக்களம் (2014)*

## பாலியல் துன்புறுத்தல் என்றால் என்ன?

எந்தவொரு விரும்பத்தகாத பாலியல் ரீதியான தொடுகைகள், பாலியல் ரீதியான விண்ணப்பங்கள், பாலியல் ரீதியான வாய்மொழி மூலமான , உடலியல் ரீதியான செய்கை அல்லது ஒருவருக்கு அவமானம், வெறுப்பு, அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடிய பாலியல் ரீதியான எந்தவொரு நடவடிக்கையும் பாலியல் துன்புறுத்தலாகும். இது அவ்வாறான ஒரு நிகழ்வையோ அல்லது தொடர்ச்சியான நிகழ்வுகளையோ உள்ளடக்கலாம். பாலியல் துன்புறுத்தலானது திட்டமிட்ட, மற்றவரின் விருப்பமின்றிய அல்லது வற்புறுத்தும் நடவடிக்கையாக அமையலாம்.[4]

பொதுப்போக்குவரத்து ஊடகங்களில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தலானது, வீடு, தொழில் செய்யும் இடம் மற்றும் பொதுவிடங்களில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தலின் ஒரு பகுதியே ஆகும்.

---

1 Sexual Harassment on public trains and buses, UNFPA (2015) {unpublished}
2 http://www.wrirosscities.org/sites/default/files/Final_Report_30072015.pdf
3 பங்களிப்பு 2006 39.7% இலிருந்து 2014 34.7% ஆக குறைந்திருக்கிறது
4 UNHRC Policy on harassment - http://www.un.org/womenwatch/osagi/UN_system_policies/(UNHCR)policy_on_harassment.pdf

பொதுப்போக்குவரத்து ஊடகங்களில் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தலானது பெண்களையும் பெண் பிள்ளைகளையும் உடல் ரீதியாக, மன ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக பாதிப்பதுடன் அவர்களை பாரபட்சமாய் நடாத்தும் ஒரு கலாச்சாரத்துக்கும் இட்டுச்செல்கிறது.

குடித்தொகை மற்றும் வீட்டுத்தொகை மதிப்பின் படி, இலங்கையின் தொழிலாளர் குடித்தொகையில் பெண்களின் பங்களிப்பு 2006 ஆம் ஆண்டு 39.5% இலிருந்து 2014ஆம் ஆண்டு 34.7% வீதமாக குறைந்திருக்கிறது.

ஆய்வின் முக்கியமான முடிவானது, இவர்களில் 50% ஆன பெண்கள் தங்கள் பணியிடங்களுக்கு செல்ல பொதுப்போக்குவரத்து மூலங்களையே பயன்படுத்துகிறார்கள். ஆகவே இந்தப்பிரச்சனையானது இலங்கைப்பெண்களின் தொழிலாளர் குடித்தொகைப்பங்களிப்புக்குறைவுக்கான ஒரு காரணியாக கருதப்படலாம்.

## பாலியல் துன்புறுத்தலுக்கான சட்டம்

அரசியலமைப்பு சட்டத்தின் **பிரிவு 12(2)** இன்படி, “ஒருவன் அல்லது ஒருத்தியுடைய பால்நிலை அடிப்படையில் பாரபட்சமாக நடாத்தப்படுதலானது அந்த நபரின் சமத்துவத்திற்கான அடிப்படை உரிமை மீறலாகும்.”

குற்றவியல் சட்டத்தின் **345** ஆம் பிரிவு சட்ட இலக்கம் **22, 1995** இன் படி பாலியல் துன்புறுத்தல் தண்டனைக்குரிய குற்றமாக அடையாளம் காணப்படுகிறது. இந்த பிரிவின் கீழ் பாலியல் துன்புறுத்தல் உள்ளடக்குவதாவது **“பாலியல் ரீதியிலான தாக்குதல், வற்புறுத்துதல் வாய்மொழி மற்றும் செய்கைகள் மூலமாக பாதிக்கப்படுபவருக்கு வெறுப்பை உண்டுபண்ணுதல் என்பனவாகும்.”** குற்றவாளியின் குற்றம் நிரூபிக்கப்படுமாயின் ஐந்து வருடங்கள் சிறைத்தண்டனை.˙. அபராதம் விதிக்கப்படும். குற்றவாளி பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடு வழங்குமாறு கூட விதிக்கப்படலாம்.

ஆய்வின் படி

**52%**

ஆனவர்கள் பாலியல் துன்புறுத்தல் கிரிமினல் குற்றம் என அறிந்திருப்பதாக பதிலளித்திருந்தார்கள்.

இருப்பினும்

**60%**

பாலியல் துன்புறுத்தலுக்கு தண்டனை உண்டென்று அறிந்திருக்கவில்லை

## ஆய்வு பற்றிய அறிமுகம்

2015 டிசம்பரில் UNFPA ஆனது இலங்கையில் பொது பேரூந்துகள் மற்றும் புகையிரதங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல்கள் பற்றிய தேசிய ஆய்வு ஒன்றினை மேற்கொண்டிருந்தது. இந்த ஆய்வின் நோக்கமானது பொதுப்போக்குவரத்து ஊடகங்களில் பாலியல் துன்புறுத்தல்கள் எவ்வளவு? எப்படிப்பட்டவை? அவற்றின் நடைபெறும் தகவு போன்ற தகவல்களை முழுமையாக புரிந்து கொள்வதற்காக ஆய்வு ரீதியான தகவல்களை பெற்றுக்கொள்ளுதலாகும்.

தகவல்கள் பங்காளர் கலந்துரையாடல்கள், முக்கியமான நபர்களுடனான உரையாடல், கேள்விப்பத்திர ஆய்வு மூலம் பெறப்பட்டன. இந்த ஆய்வுக்கான மாதிரிக்குடித்தொகையானது நாட்டின் ஒன்பது மாகாணங்களின் அனைத்து மாவட்ட நிர்வாக பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 15-35 வயதுக்கிடைப்பட்ட 2,500 தனிநபர்களை உள்ளடக்கியிருந்தது.

## முக்கியமான ஆய்வு முடிவுகள்



**90%**

**ஆனோர் பேரூந்து மற்றும் புகையிரதங்களில் பாலியல் துன்புறுத்தலை சந்தித்ததாக கூறினர்**

**ஆய்வுக்குட்பட்ட பெண்களும் பெண்பிள்ளைகளும் பொதுப்போக்குவரத்து ஊடகங்களை பயன்படுத்துவது**



## குறைந்தது ஒரு தடவையாவது எதிர்கொள்ளும் பாலியல் துன்புறுத்தல்கள்

இந்த ஆய்வானது பாலியல் ரீதியான உடலியல் தொடுகை முதல் வாய்மொழி மற்றும் காட்சி நடவடிக்கைகள் வரையான பாலியல் துன்புறுத்தல்களாக அடையாளம் காணப்படக்கூடிய 35 நடவடிக்கைகளை அடையாளம் கண்டிருந்தது. பெரும்பாலான பாலியல் துன்புறுத்தல்கள் உடலியல் ரீதியானவை என்று முடிவுகளில் இருந்து அடையாளப்படுத்த முடிந்தது.




ஆணோர் குற்றவாளி ஆண் என்று பதிலளித்திருந்தார்கள்




### பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெறும் நிகழ்தகவு




## பங்களிக்கும் காரணிகள்

### தூரம்

பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் பொதுப்போக்குவரத்தின் போது தூரத்தில் தங்கியிராமல் பொதுவாக இடம்பெறுகின்றன. ஆனால் இலக்குக்குழுக்கலந்துரையாடல்களின் போது இந்த சம்பவங்கள் அதிகமாக வெகுதூரம் பயணிக்கும் பேரூந்து களிலேயே பாதிக்கப்பட்டவர் நீண்ட நேரம் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் படியாக இடம்பெறுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது.

### நேரம்

இந்த சம்பவங்கள் காலை மற்றும் மாலை வேளைகளில் பொதுவாக அதிகம் பேர் நெருக்கமாக பயணம் செய்யும் வேளைகளிலேயே அதிகம் நடப்பதும் அவதானிக்கப்பட்டது.பேரூந்துகள் மற்றும் புகையிரதங்களில் ஏற்படும் அதிக சனநெருக்கடியும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு அதிலும் உடல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு முக்கியமாண பங்களிக்கிறது.

> ஒருநாள் நான் பேருந்தில் டியூஷன் வகுப்பொன்றுக்காய் போய்க்கொண்டிருந்தேன். 15 வயது மதிக்கத்தக்க ஆண் என் அருகில் அமர்ந்திருந்தார். நான் இறங்கும் முன்பாகவே என் உடையில் விந்து வெளியேற்றம் செய்து விட்டிருந்தார். என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை. நான் உதவியற்றவளாக உணர்ந்தேன். அத்துடன் நடந்ததை பற்றி நான் யாரிடமுமே வெளிப்படுத்தவில்லை.
>
> *– இலக்குக்குழு கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்*

**37%**
ஆணோர் அச்சம்பவம் தங்கள் வேலையை நேர்மறையாக பாதித்ததாக தெரிவித்தனர்

**29%**
ஆணோர் அச்சம்பவம் தங்களின் கல்வியை நேர்மறையாக பாதித்ததாக தெரிவித்தனர்

## Emotional impact of sexual harassment

**76%** ஆனோர் கோபமடைந்தார்கள்

**68%** ஆனோர்சிறுமைபட்டதாக, அவமானப்படுத்தப்பட்டதாக உணர்ந்தார்கள்

**48%** ஆனோர் பயந்தார்கள்

**45%** ஆனோர் தரம் தாழ்த்தப்பட்டதாக உணர்ந்தார்கள்

**44%** ஆனோர் அது தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை பாதித்ததாக குறிப்பிட்டனர்

> ஒரு மருத்துவ தாதியாக நான் பின்னிரவு நேரங்களில் பணியாற்ற வேண்டியிருக்கும். ஒருநாள் வேலை முடிந்து களைப்புடன் பேரூந்தில் ஏறியபோது என் பின்னிருக்கையில் அமர்ந்திருந்த ஆண்பயணியொருவரை அவதானித்தேன்.நாப்பது வயது மதிக்கத்தக்க கனவான் போன்ற உடைகளில் இருந்தார். தேவையின்றி அவர் என்னை தொட்டுக்கொண்டிருப்பதை நான் உணர்ந்தேன். நான் எதிர்த்தபோது அவர் நான் இப்படி இருப்பதானால் என்னுடைய தனி வாகனத்தில் வந்திருக்க வேண்டும் என்று சொன்னார். அந்த சம்பவம் என்னை மிகவும் அசௌகரியத்துக்குள்ளாக்கியது
>
> *– இலக்குக்குழு கலந்துரையாடலில கலந்து கொண்டவர்*

## நடவடிக்கை எடுத்தல்

பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானவர்கள் சம்பவத்தின் போதும் அதன் பிறகும் பெரும்பாலும் மௌனமாக இருத்தலே பொதுப்போக்குவரத்தில் பொதுவாக பேரூந்துகளில் அநேகமாக அவதானிக்கப்படும் எதிர்வினையாகும்.

92% மாதிரிக்குடித்தொகை பொதுப்போக்குவரத்தில் இடம்பெற்ற பாலியல் துன்புறுத்தல்களுக்கு சட்ட உதவியை நாடியதில்லை. சம்பவம் நடைபெற்ற அந்த நேரம் அவர்கள் போலீசுக்கு தகவல் தெரிவிக்க முடியாத சூழ்நிலையில் இருந்ததையும் அவதானிக்க முடிந்தது. இதே சம்பவம் தொடர்ந்து நடக்குமாயின் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர் மூலமாக போலீசில் முறைப்பாடு செய்கிறார்கள் என்பதையும் முடிவுகள் காண்பிக்கின்றன.

இலக்குக்குழு கலந்துரையாடலின் படி பெண்களும் பெண் பிள்ளைகளும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும்போது

1. துன்புறுத்துபவரிடம் இருந்து தூரமாக அதே பேரூந்தினுள்ளேயே இடத்தை மாற்றிக்கொள்கிறார்கள். (உ.ம் இருக்கைகளை மாற்றிக்கொள்ளுதல்)

2. போகவேண்டிய இடத்துக்கு வேறு பேரூந்து அல்லது புகையிரதம் மூலம் பயணித்தல்

ஒருவேளை துன்புறுத்தல் தொடர்ந்து இடபெற்று, பயணிக்க வேறு போக்குவரத்து மார்க்கமும் இல்லாத நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் தங்குமிடத்தை மாற்றிக்கொள்கிறார்கள் என்று ஆய்வு தெரிவிக்கிறது.

## சக பயணியின் இடையீடு




சக பயணிகளின் முக்கியமான பங்கினை அடையாளம் காணுதல்

**சக பயணிகளின் முக்கியமான பங்கினை அடையாளம் காணுதல்**

பெரும்பாலான பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவரையும் துன்புறுத்துபவரையும் சுற்றி நடந்த சம்பவத்துக்கு சாட்சியாகவோ சக பயணியாகவோ மற்றவர்கள் இருப்பார்கள். இங்கே சக பயணி எனப்படுவது சம்பவம் நடக்கும் போது அங்கே இருந்த, துன்புறுத்தல் சம்பவத்தை கண்ட ஆனால் அதனோடு தொடர்புறாத பயணியே ஆகும்.

ஆய்வு முடிவுகளின்படி பேரூந்து அல்லது புகையிரதங்களில் சகபயணிகள் தாங்கள் சம்பவத்தை கண்டாலும் அல்லது அது தொடர்பில் எச்சரிக்கப்பட்டாலும் இடையிட்டு பாலியல் துன்புறுத்துதலை நிகழ்த்துபவரை தடுத்தல் மிக அரிதானதாகும். அதற்கான பிரதான காரணங்களாக பிரச்சனை உருவாகக்கூடிய ஆபத்தை தவிர்த்தல் மற்றும் தன்பக்கமாக கவனம் ஈர்க்கப்படுவது குறித்த பயம் என்பன இலக்குக்குழு கலந்துரையாடலில் அவதானிக்கப்பட்டன.

> ஆண் பயணிகள் தேவையேயில்லாமல் சிறு பெண்களை தொடுவதையும் அவர்கள் மேல் உரசுவதையும் பல தடவைகள் கண்டிருக்கிறேன். பேரூந்து நடத்துனர்கள் கூட சிறுவர்களை பேரூந்தில் ஏற்றும் போது தேவையில்லாமல் தொடுவதுண்டு.
>
> *– முக்கிய தகவலாளர்*

## உதவி கேட்டல்




**போலீசிடமோ அல்லது வேறு வடிவிலோ உதவி கோரியிருந்தனர்**




**ஆனோர் பொதுப்போக்குவரத்து ஊடகங்களில் பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து முறையிடும் அவசர இலக்கம் குறித்து அறிந்திருக்கவில்லை என்று தெரிவித்தனர்**

### பொதுமக்களுக்கான பிரசாரங்கள்

- பொதுப்போக்குவரத்தின் போது நடைபெறும் பாலியல் துன்புறுத்தல்கள் குறித்த நாடளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இதன் துர் விளைவுகள் எப்படி ஒரு தனிநபரை, சமூகத்தை மற்றும் நாட்டை எப்படிப்பாதிக்கும் என்பது குறித்த அறிவூட்டவும் பொது மக்களுக்கான பிரசாரங்கள் மிகவும் முக்கியமானவையாகும்.
- பாலியல்துன்புறுத்தல்கள் எவையெவை? சகபயணிகள் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஊடகங்கள் தங்களுடைய பொது விவாதங்கள் கலந்துரையாடல்கள் மூலமாக ஏற்படுத்த வேண்டும்.சமூக மாற்றத்திற்கான பிரசாரங்கள், தொலைக்காட்சி, வானொலி, செய்திப்பிரிவு, சமூக வலைத்தளங்கள் மூலமாக ஊடகங்கள் இதற்கு பங்களிக்க முடியும்.
- இந்த பிரச்சனை குறித்த பொதுமக்களுக்கான பிரசாரங்களில் பாலியல் துஷ்பிரயோகத்தை ஒரு வீதம் கூட சகித்துக்கொள்ளாத நடத்தை மாற்றத்துக்கான தொடர்பாடல் வழிமுறைகள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இதை தைரியமாக எதிர்த்து நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

## பரிந்துரைகள்

### 1. கொள்கை ரீதியான இணைந்த செயற்பாடுகளுக்காக பங்காளர்களை இணைத்தல்

பொதுப்போக்குவரத்திற்கான கொள்கை மற்றும் நடவடிக்கைகள் எவ்வாறு பால் சார் பார்வையை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்படலாம் என்பதை அடையாளம் காண்பதற்கு பொதுப்போக்குவரத்தில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் தொடர்புடைய பங்காளர்களை உள்ளடக்கி தேசிய கலந்துரையாடல் நடாத்தப்பட வேண்டும். கொள்கைகளின் வினைத்திறனான அமுல்படுத்தல், கண்காணித்தல், மதிப்பிடுதல் ஆகியனவும் நடைபெற வேண்டும்.

### 2. குறை கேட்டல் மற்றும் பின்னூட்ட பொறிமுறைகள் வலுப்படுத்தப்பட வேண்டும்

பாதுகாப்பான பொதுப்போக்குவரத்து வலையமைப்பை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு வினைத்திறனான நிறுவனரீதியான/கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் அவசியமாகும்.

- முறையிடலை இலகுவாக்க இந்தப்பிரச்சனைக்கெனவே ஒரு உதவி கோரும் வலையமைப்பை உருவாக்குதல். அவ்வலையமைப்பானது பொதுப்போக்குவரத்தில் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் முறைப்பாடுகளை ஏற்பவரும் சட்ட அதிகாரம் கொண்டவர்களும் என்ன நடவடிக்கைகளை உள்ளடக்க வேண்டும் என்பதை கொண்ட நியமப் படிமுறைகளை (SOP) கொண்டிருக்க வேண்டும்.
- பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களை அடையாளம் காணுதல், நடவடிக்கை எடுத்தல், கண்காணித்தல் போன்றவற்றில் இலங்கை பொலிஸ் மற்றும் போக்குவரத்து பாதுகாப்பு அமைப்புக்களுக்கிடையில் ஒருங்கிணைவு வலுப்பெற வேண்டும்
- பேருந்து நிலையங்கள் மற்றும் புகையிரத நிலையங்களில் பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகளுக்கு எதிராக முறைப்பாடு செய்ய வேகமானதும் வினைத்திறனானதுமான பொறிமுறைகளை உருவாக்கல்
- வடிவமைக்கப்பட்ட நியமப்படிமுறைகள், பாலியல் துன்புறுத்தல் குற்றங்களை கையாளுதல் தொடர்பில் உருவாக்கப்படும் முறையீட்டு பொறிமுறைகள் ஆகியவற்றில் பொதுப்போக்குவரத்து அதிகாரிகள் முறையாக பயிற்றுவிக்கப்பட்டிருப்பதை உறுதி செய்தல்

- குறித்த கால இடைவேளைகளில் நகரில், பொது இடங்களில் பெண்கள், பெண் பிள்ளைகளின் பயணம் குறித்து பாதுகாப்பு மதிப்பீடுகளை செய்தல்.[5] இந்த முடிவுகள் பொது போக்குவரத்தின் போதான பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் சான்று-அடிப்படையான கொள்கைகளை வடிவமைப்பதில் உதவி புரியும்.

### 3. பெண்களையும் பெண்பிள்ளைகளையும் தைரியமாக எதிர்வினையாற்றுவதற்கு வலுப்படுத்துதல்

பெண்களும் பெண்பிள்ளைகளும் பொதுப்போக்குவரத்தில் பாலியல்துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுபோது பெரும்பாலும் மௌனமாகவே இருக்கிறார்கள். காரணம் இது பொதுப்போக்குவரத்தில் சகஜம் என்று கருதப்படுவதே. விழிப்புணர்வு பிரசாரங்கள் மூலம் பொதுப்போக்குவரத்தில் பாலியல் துன்புறுத்தலானது இலங்கை குற்றவியல் சட்டத்தின் படி தண்டிக்கப்பட வேண்டிய கிரிமினல் குற்றம் என்பதும் அதை பற்றி வெளியிடுதலும் உதவி கோருதலும் ஒரு தனிநபரின் உரிமை என்பதும் பொதுமக்களிடம் எடுத்து சொல்லப்படவேண்டும்.பாதிக்கப்படுபவர் அதற்கென ஏற்படுத்தப்பட்ட பொறிமுறைகளில் உள்ள உள்நாட்டு அதிகாரிகளிடம் குற்றம் குறித்து முறையிடுவதை பாதுகாப்பாக உணர வேண்டும்.

பொதுப்போக்குவரத்து மூலங்களில் பயணிக்கும் பயணிகளுக்கான நடத்தை விதிகள் உருவாக்கப்படுவதற்கும் அவை முறையாக பேரூந்து மற்றும் புகையிரதங்களில் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது.

### 4. சகபயணியின் இடைமீட்டை ஊக்கப்படுத்துதல்

பாலியல் துன்புறுத்தல் சம்பவத்தை பார்க்கும் போதும் அது குறித்து அறியும் போதும் சகபயணிகள் அத்துன்புறுத்தலை தடுக்கவோ இடையிடவோ கூடியவர்களாக இருக்கிறார்கள். சகபயணியின் இடையீடு குற்றவாளியின் பாலியல் துன்புறுத்தலை தடுக்கும் ஒன்றாக இருப்பதுடன் சகல பயணிகளும் பாதுகாப்பாக பயணிக்கும் சூழலுக்கும் பங்களிக்கிறது.

பொதுமக்களின் முன்னெடுப்புக்கள் சகபயணி இடையீடுகளை ஊக்கப்படுத்த வேண்டும், பொது போக்குவரத்தில் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த சகபயணிகள் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து விழிப்புடன் இருப்பது அவசியம்.

**சகபயணிகள் துன்புறுத்தலை தடுக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள் அத்தோடு நல்ல நடத்தையினால் மற்றவர்களிலும் நல்ல விளைவுகளை ஏற்படுத்த வல்லவர்கள்.**

***சகபயணிகள் இடையீட்டுக்கான சில குறிப்புக்கள்*** [6]

## CARE

C **CREATE-** உருவாக்கவும். ஒரு கவனக்கலைப்பை உருவாக்கிவிட்டு நீங்கள் துன்புறுத்தல் சம்பவத்தில் தலையிட செய்ய வேண்டியதை செய்யவும்.இது பாதிக்கப்பட்டவருக்கு பாதுகாப்பான இடத்துக்கு இடம் மாற ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும்

A **ASK-** கேட்கவும். பாதிக்கப்பட்ட பெண்ணிடம் ஏதாவது பிரச்சனையா? ஏதாவது உதவி வேண்டுமா என்று கேட்கவும்

R **REFER-** அதிகாரிகளை நாடவும். பொலீஸ், சம்பந்தப்பட்ட பேரூந்து நடத்துனர் அல்லது ஓட்டுனர்

E **ENLIST-** சேர்க்கவும். மற்றவர்களின் உதவியை நாடி அவர்களையும் உங்களுக்கு துணையாக சேர்த்துக்கொள்ளவும். துன்புறுத்தலை தடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது குற்றத்தை நிறுத்த உதவும்

## Four D's

D **DIRECT-** நேரடியாக செயலாற்றவும். நேரடியாக சம்பவத்தில் இடையிடுதல், குற்றவாளியிடம் பேசுதல், உங்களுக்கு நடந்தது தெரியும் என குற்றவாளி அறியச்செய்தல்

D **DISTRACT-** கவனக்கலைப்பு. குற்றவாளி மேலும் துன்புறுத்தாதிருக்க ஒரு கவனக்கலைப்பை உருவாக்குதல்

D **DELEGATE-** பணித்தல். பேரூந்து நடத்துனர், ஓட்டுனர் சம்பவம் தொடர்பில் எச்சரிக்கை செய்து நடவடிக்கை எடுக்கும் படி பணித்தல். மற்ற பயணிகளுக்கும் தெரியப்படுத்துதல்

D **DELAY-** தாமதம். உடனடியாக அந்த சந்தர்ப்பத்தில் செயலாற்ற முடியாவிடினும், பாதிக்கப்பட்டவரிடம் அவரது நிலை மற்றும் உதவி ஏதும் தேவையா என்று கேட்டல்

---

5 Women's Safety Audits: What works and where? UN-HABITAT http://mirror.unhabitat.org/downloads/docs/7381_86263_WICI.pdf
6 Bystander Intervention Techniques – Northwestern University https://sapac.umich.edu/article/bystander-intervention

### 5. ஓட்டுனர் மற்றும் நடத்துனருக்கு விழிப்புணர்வூட்டல்

பயணிகளால் ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்களை தடுக்கும் அதிகாரம் கொண்ட முதல் நபர்கள் சம்பந்தப்பட்ட போக்குவரத்து மூலத்தின் ஓட்டுனரும் நடத்துனருமே ஆவர். சகபயணிகளின் இடையீட்டுக்கு மேலதிகமாக ஓட்டுனரும் நடத்துனரும் பயணிகளின் இருக்கைகளை மாற்றி வழங்குவது மூலமாக குற்றத்தை தடுக்க முடியும். அத்தோடு குற்றம் குறித்து முறையிடுதல், குற்றவாளியை பக்கத்தில் இருக்கும் பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லுதல் அல்லது குற்றவாளியை பேருந்து அல்லது புகையிரதத்தில் இருந்து அகற்றுதலும் அவர்களால் இயலும்.

**பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்**

- பால்நிலைபாகுபாடுகள், சட்டரீதியானமுக்கியத்துவம், அந்த சந்தர்ப்பத்தில் குற்றத்தை தடுத்து நடவடிக்கை எடுக்க அதிகாரமுள்ளவர்களாகிய அவர்களின் பொறுப்பு தொடர்பில் நடத்துனர் ஓட்டுனர்களுக்கு கிரமமான பயிற்சி நெறிகள் மூலமாக பயிற்றப்பட வேண்டும்.
- தற்போது பாவனையில் இருக்கும் பயிற்சிக்குரிய வளங்களை பாதுகாப்பு, பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு பால்நிலை சமத்துவத்தை உறுதி செய்யும் பொருட்டு மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
- நடவடிக்கை எடுக்க, முறையிட மற்றும் பாலியல் துன்புறுத்தல்களை ஆவணப்படுத்த தெளிவான வழிகாட்டல்கள் மற்றும் வரைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இவைகள் அரசாங்கம் மற்றும் சட்டத்துறையால் சுற்று நிருபங்கள் அல்லது பொதுமக்களுக்கான அரசாங்க செய்திகள் வழியாக அறிவிக்கப்பட்டு கட்டாயமாக்கப்பட வேண்டும்.

**'மக்களின் பிரச்சனைகள் மீதான ஓர் பார்வை'** ஆனது இலங்கையின் சமூக அபிவிருத்தி பிரச்சனைகள் தொடர்பிலான கொள்கைச்சுருக்க தொடர் ஆகும்.

## References

Asian Development Bank, 2015. Policy Brief: A Safe Public Transportation Environment for Women and Girls *http://genderinsite.net/sites/default/fles/safe-public-transport-women-girls.pdf*

Asian Development Bank, 2014. Rapid Assessment of Sexual Harassment In Public Transport and Connected Spaces in Karachi. Technical Assistance Consultant's Report. *https://www.adb.org/sites/default/fles/project-document/152881/44067-012-tacr-19.pdf*

Bystander Intervention Techniques - Northwestern University *https://sapac.umich.edu/article/bystander-intervention*

Engaging Bystanders to Prevent Sexual Violence Information Packet *http://www.nsvrc.org/publications/nsvrc-publications-information-packets/engaging-bystanders-prevent-sexual-violence*

Give Help - Bystander Intervention *http://www.actnowsrilanka.org/en/act-now/give-help*

Hollaback. 'How to respond to harassment' - *https://www.ihollaback.org/responding-to-harassers/*

Street Harassment: A bystander's guide *https://www.ihollaback.org/wp-content/uploads/2010/09/Final-Bystanders-Draft.png*

How to Respond to a  Survivor RAINN (Rape, Abuse & Incest National Network) *https://www.rainn.org/articles/how-respond-survivor*

National Census on Population and Housing 2012 – Department of Census and Statistics *http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/Pages/Activities/Reports/CPH_2012_5Per_Rpt.pdf*

Villa, Monique. Sexual harassment on public transport is a problem we must solve. The Independent *http://www.independent.co.uk/voices/comment/sexual-harassment-on-public-transport-is-a-problem-we-must-solve-9826153.html*

Women's Safety Audits: What works and where? UN-HABITAT *http://mirror.unhabitat.org/downloads/docs/7381_86263_WICI.pdf*

**இலங்கை ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்**
பௌத்தாலோக மாவத்த,
கொழும்பு 07, இலங்கை

தொலைபேசி: +94 (011) 2580840

/unfpa.srilanka @unfpasrilanka @unfpasrilanka srilanka.unfpa.org